**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.**

**அசல் வழக்கு எண். 88 /2024**

பெயர் : செல்வன் த/பெ.அர்த்தனாரி நாள் : 22.07.2026

**பி.வா.சா.1 : வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இந்த வழக்கின் பிராதில் இணைக்கப்பட்டுள்ள வரைபடம் சரியானது என்றால் தவறானது. வரைபடத்தை பார்த்துள்ளேன். அதில் என்ன தவறு உள்ளது என்றால் மஞ்சள் நிறமிட்ட காட்டப்பட்டுள்ள பகுதியானது எனது பூமியை சேர்த்து காட்டப்பட்டுள்ளது, எனவே தவறானது. மற்ற நீல கலர், பிரவுன் கலர் சரியானதா என்றால் அளந்து பார்த்தால் தான் தெரியும். வாதி முருகேசனுக்கு அவரது குடும்பத்தார் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.1 ஆவணமான விடுதலை பத்திரத்தை ஏற்றுக் கொள்கிறேனா என்றால் ஏற்றுக்கொள்கிறேன். எழுதிக்கொடுத்தது எனக்கு தெரியும். மேற்படி ஆவணம் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் அனுபவிக்கிறார்கள்.

2. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் S.F.No.283/1A, 19-1/2 செண்ட் பூமி 1ம் வாதி அனுபவித்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா 1வது அயிட்ட சொத்தான 19-1/2 செண்டில் நான் உரிமை கோரவில்லை. 2வது அயிட்ட சொத்தை 2ம் வாதி சத்யாவிற்கு 3ம் பிரதிவாதி நிர்வாகத்திடமிருந்து 15.5/8 செண்டினை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரையம் நடைமுறைக்கு வந்துவிட்டதா என்றால் வந்துவிட்டது. அதேபோல 1ம் பிரதிவாதியான எனது மனைவி மாலதிக்கும் 15.5/8 செண்ட் 3ம் பிரதிவாதி நிர்வாகத்திடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 2ம் வாதிக்கும், என் மனைவியான 1ம் பிரதிவாதிக்கும் கிரையம் ஒரே நாளில் ஏற்பட்டது என்றால் சரிதான்.

3. 25.08.2020 ம்தேதியில் 2ம் வாதி சத்யா என் மனைவி மாலதிக்கு 5-1/4 செண்ட் 3ம் பிரதிவாதி நிர்வாகத்திடமிருந்து கிரையம் பெற்று சொத்தில் இருந்து கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மற்றொரு 5-1/4 செண்ட் அதே தேதியில் 2ம் வாதி 1ம் பிரதிவாதியான எனது மனைவிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். 2 வது அயிட்டமாக காட்டப்பட்டுள்ள சொத்தான 2 கிரையமாக சத்யா எனது மனைவிக்கு கிரையம் கொடுத்த 10-1/2 சொத்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்து உத்தேச வரைபடத்தில் நீல நிறத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 24.08.2016 ல் 2ம் வாதியும், 3ம் பிரதிவாதியும் 4 ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் 3 வது அயிட்ட சொத்தை பொருத்து ஒரு தானசெட்டிமெண்ட் பத்திரம் எழுதிக் கொடுக்கிறார்கள் என்றால் சரிதான். தானசெட்டிமெண்ட் பத்திரம் முறையாக எழுதி பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

4. தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிய தேதியன்றே நடைமுறைக்கு வந்துவிட்டது என்றால் வந்துவிட்டது. தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட சொத்துக்கள் வரைபடத்தில் சிவப்பு நிறத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணமாக தானசெட்டில்மெண்ட் பத்திரமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் முதல் சாட்சி நான் தான் என்றால் சரிதான்.

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2026.07.22 16:06:19 +0530

2வது சாட்சி பெருமாள்ராஜ் என்பவர் 3ம் பிரதிவாதி பள்ளி சம்பந்தப்பட்ட நபர் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 தானசெட்டில்மெண்ட் பத்திரம் பொதுமக்கள் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட வாசகங்கள் சரியாக உள்ளது என்றால் தவறான வாசகம் உள்ளது, அளவுகளை தாண்டி முருகேசன் பூமி வரை உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் போடும்போது மேற்படி பத்திரத்தில் விபரங்கள் படித்து பார்த்து தெரிந்து கொண்டு கையெழுத்து போட்டேன் என்றால் நான் படித்து பார்க்கவில்லை, அளவுகள் அளந்தது தெரியும்.

5. தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதும் முன்பாக சர்வேயர் மூலமாக அளந்து வரைபடம் பெறப்பட்டு தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் பூமியானது 4ம் பிரதிவாதியான பஞ்சாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் பத்திரத்திரல் உள்ளவாறு தான் வரைபடத்தின் அம்சங்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் வரைபடம் சரியானது, ஆனால் அளவு தவறானது. தடத்தின் ஒரு பகுதி உள்ள சொத்து தான் சத்யாவிற்கு பாத்தியப்பட்டது, மறுபகுதி பள்ளிக்கு பாத்தியப்பட்டது. மேற்படி அளவுகள் தவறாக உள்ளது என்பதற்காக இன்றுவரை சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை, அது அரசுதடம் என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை. வா.சா.ஆ.4 வரைபடத்தில் முருகேசன், அய்யாவு பூமியும், பள்ளியும் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. தானசெட்டில்மெண்ட் பூமியானது கிழமேலாக செல்லும் சாலையில் வடக்காக பிரிந்து வடக்கு நோக்கி சென்று பிரிவு மேற்காக திரும்பி மேற்கு நோக்கி செல்கிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 வரைபடத்தில் உள்ள பாதையானது முருகேசன், அய்யாவு பூமிவரை என காட்டப்பட்டுள்ளது என்றால் காட்டப்பட்டுள்ளது, ஆனால் எனது சொத்தையும் சேர்த்து காட்டப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வாதத்தில் எனது சொத்தையும்சேர்த்து முருகேசன் பூமி வரை காட்டப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும் வா.சா.ஆ.4 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் **பக்கம் 5ல் 30 அடி அகல கிழமேல் பாதையில் இருந்து ரீ.ச.95/4 நெ.காலையில் முருகேசன் மற்றும் அய்யாவு என்கிற சென்னியப்பன் ஆகியவர்கள் பாக பூமிவரை போடப்பட்டுள்ளது** என வாசகம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாசகங்களும், அமைப்புகளும் சரி என்பதால் தான் நானே சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் அளவை வைத்து தான் கையெழுத்து போட்டேன், படித்து பார்க்கவில்லை.

7. எனது முதல் விசாரணையில் 6 பத்தியில் ஒரு தானசெட்டில்மெண்ட் 4ம் பிரதிவாதிக்கு கொடுத்து உண்மை தான் என சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். அந்த நிலத்தை சாலை பயன்பாட்டிற்கு ஒதுக்கியிருந்தது என சொல்லியுள்ளது என்றால் சரிதான். 25.08.2020ல் 1ம் பிரதிவாதியான எனது மனைவி மாலதிக்கு 1ம் வாதி முருகேசன் கிரையம் கொடுத்தாரா என்றால் அதுபற்றி தெரியவில்லை. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை முழுவதுமான தெரிந்து கொள்ளவில்லை என்றால் பார்த்தேன். வா.சா.ஆ.6 ஆவணமானது செல்வம் மனைவி மாலதிக்கு முருகேசன் மனைவி சத்யா கிரையம் கொடுத்தாரா என்றால் சரிதான். வா.சா.ஆ.7 பரிவர்த்தனை ஆவணத்தின் அசல் ஆவணம் என் வசம் தான் உள்ளது. மேற்படி அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயாராக உள்ளேன். வா.சா.ஆ.7 பரிவர்த்தனை பத்திரத்தில் வாதிகள் தரப்பினராக இல்லை என்றால் சரிதான், நானும் பள்ளி நிர்வாகம் பரிவர்த்தனை செய்துள்ளோம். பரிவர்த்தனை ஆவணம்

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.07.22 16:06:24 +0530

எழுதப்பட்டது வாதிகளுக்கு தெரியாது என்றால் சரிதான். எங்கள் சொத்தை நாங்கள் எழுதிக்கொண்டதால் அவர்களுக்கு தெரிய வாய்ப்பில்லை, அவர்களுக்கு சொல்ல வேண்டியதில்லை.

8. தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் உள்ள சொத்தும், பரிவர்த்தனை பத்திரத்தில் உள்ள சொத்தும் ஒரே சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.4 தானசெட்டில்மென்ட் செல்லக்கூடிய ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 பரிவர்த்தனை ஆவணம் முத்திரைத்தாள், தயார் செய்யப்பட்டது, பதிவு செய்யப்பட்டது அனைத்தும் ஒரே நாளில் செய்யப்பட்டதா என்றால் இல்லை, முத்திரைத்தாள் ஒரு தேதியில் வாங்கி தாமதமாகத்தான் பதிவு செய்யப்பட்டது. பரிவர்த்தனை ஆவணம் இன்றவரை நடைமுறைக்கு வரவில்லை என்றால் வந்துவிட்டது, அது என் சொத்தாக உள்ளது. 20.08.2020 ல் எழுதப்பட்டதாக சொல்லும் ஆவணம் 15.09.2020 ல் தான் பதிவு செய்யப்பட்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5,6 ஆவணங்கள் எழுதப்பட்ட பின்பு முன்தேதியிட்ட முத்திரைத்தாள் பெற்று போலி ஆவணம் தயாரித்து வா.சா.ஆ.5,6ஆவணங்களுக்கு பின்னிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9. பரிவர்த்தனை ஆவணம் எழுதும்போது வில்லங்க சான்று எடுத்து பார்த்தோமா என்றால் பார்த்தேன். வில்லங்க சான்று பதிவு செய்யப்பட்ட தேதியன்று போட்டு பார்த்தேனா என்றால் போட்டுபார்த்தேன். வில்லங்கத்தில் 2016தான செட்டில்மென்ட் குறிப்பு வந்துள்ளதா என்றால் நீள அகலத்துடன் வந்திருந்தது. பரிவர்த்தனை எழுதுவதற்கு சர்வே மூலமாக நிலத்தை அளக்கவில்லை என்றால் அளந்தேன். அளவீடு செய்த வரைபடம் பரிவர்த்தனை பத்திரத்தில் இணைக்கப்படவில்லை என்றால் இணைக்கப்படவில்லை. அளவீடு செய்த வரைபடம் இணைக்கப்படவேண்டும் என்பது தான் விதி என்றால் அதுபற்றி தெரியாது. அளவு செய்யவில்லை, ஏற்கனவே வில்லங்கம் உள்ளதை தெரிந்து கொண்டு பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் வில்லங்கம் இல்லை.

10. வா.சா.ஆ.7ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை, வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் ஆணையர் தாவா சொத்தை வந்து பார்வையிட்டாரா என்றால் பார்வையிட்டார். ஆணையர் பெயர் தெரியவில்லை. ஆணையர் அறிக்கை இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆணையர் அறிக்கையில் உள்ள விபரங்கள் சரியானதாகும். சர்வேயர் வந்தார். பரிவர்த்தனை ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை அடையாளம் காண இயலாது என்றும், அளவு செய்ய இயலாது என சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார், ஆனால் DGPS கருவியை கொண்டு அளவீடு செய்தால் தான் அடையாளம் காணமுடியும் என சொன்னார். அதற்கான நடவடிக்கை எடுத்தேனா என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும். ஆணையர் இடைக்கால அறிக்கையில் அவரால் அளவு செய்த சொத்தின் வரைபடத்தை இணைக்கவில்லை என்றால் சரிதான்.

11. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 புகைப்படங்களை யார் எடுத்தார்கள் என்றால் நான் தான் எனது மொபைல் போனில் எடுத்தேன். அந்த போன் தற்போது பழுதாகிவிட்டது. மேற்படி போனில் உள்ள மெமரிகார்டு, எந்த கணினில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது எனக்கு தெரியாது என்றால் நான்போட்டோ ஸ்டுடியோ கடையில் கொடுத்து அந்த புகைப்படத்தை பதிவிறக்கம் செய்தேன். அது சம்பந்தமாக விபரம் எனக்கு தெரியாது. புகைப்படத்துடன் சாட்சிய சான்றிதழ் ஆவணம் இணைக்கப் படவில்லை என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும். பி.வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள புகைப்படத்தில் காணப்படும் வழக்கு நிலுவையில் உள்ள அறிவிப்பு

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.07.22 16:06:29 +0530

பலகையை நான் தான் வைத்தேன். வழக்கு நிலுவையில் இருக்கும் போது கம்பி வேலி போட்டேனா என்றால் அதற்கு முன்பே போட்டேன்.

12.அந்த கம்பிவேலியை உடைத்ததால் தான் மீண்டும் போட்டேன். அப்போது இந்த வழக்கு நிலுவையில் இருந்தது. தற்போது வேலி இல்லை என்றால் மீண்டும் உடைத்துவிட்டதால் நான் கம்பிவேலி அமைக்கவில்லை. இது சம்பந்தமாக SP ஆபிசில் புகார் கொடுத்தேன். வழக்கு தாக்கல் செய்த தேதியிலும் தற்போதும் வேலி இல்லை என்றால் சரிதான், நான் போட்டதை உடைத்துவிட்டார்கள். எந்த தேதியில் வேலி அமைத்தேன் என சொல்லமுடியாது என்றால் சரிதான். தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் பொதுமக்கள் 3வது அயிட்ட தடத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். பொதுமக்களில் ஒருவர்தான் வாதிகள் என்றால் சரிதான், நானும் பொதுமக்களில் ஒருவன்தான். வாதிகளின் பூமிக்கு மேற்கு பக்கமாக தடம் உள்ளதாக சொல்கிறேன் என்றால் சரிதான். அந்த தடமானது எல்பிபி வாய்க்கால் தடத்திலிருந்து வருகிறது என்றால் எல்பிபி வாய்க்கால் ஜீப் ரோட்டில் இருந்து வடக்காக பிரிந்து வருகிறது என்றால் தார் சாலையில் இருந்து வடக்காக பிரிந்து வருகிறது. அது வாய்க்கால் ரோடு ஆகும்.

13.வாய்க்கால் ரோடு எல்பிபி வாய்க்காலுக்காக ஆர்ஜீதம் செய்யப்பட்ட பகுதியில் உள்ளது என்றால் தெரியவில்லை. எல்பிபி பொதுப்பணித்துறைகள் அதிகாரிகள் ஜீப்பில் வந்து செல்வதற்காக ஏற்படுத்தப்பட்டதால் அது ஜீப் ரோடு எனப்படும் என்றால் தெரியாது. பொதுப்பணி துறை கட்டுப்பாட்டில் ஜீப் ரோடு எந்த காலத்திலும் தடுக்க கூடாது என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண். 111ல் உள்ள எல்பிபி பாதையிலிருந்து வடக்கு நோக்கி செல்கிறது என்றால் 18 அடி ரோடு உள்ளது. 3ம் பிரதிவாதியான பள்ளி தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். நான் எனது மனைவி 3ம் பிரதிவாதிக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நானும், 3ம் பிரதிவாதியும் ஒன்றாக வழக்கு நடத்துகிறோம் என்றால் இல்லை, தனித்தனியாக வழக்கு நடத்துகிறோம். தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் ஒரு தரப்பினராக இருந்துகொண்டு அதை பரிவர்த்தனை மேற்கொள்ள எந்த உரிமையும் இல்லை என்றால் உள்ளது, ஏனென்றால் பாதையின் மேற்கு பகுதி பள்ளிக்கு சொந்தமானது என்பதால் உரிமை உள்ளது. தானசெட்டில்மெண்ட் கொடுத்தபிறகு அது பொதுப்பாதை என்றால் தானசெட்டில்மெண்ட் கொடுத்த அளவுக்குத்தான் பொதுப்பாதை மீதி பள்ளிக்கு சொந்தமானது அதைத்தான் நான் பரிவர்த்தனை செய்தேன்.
14.தானசெட்டில்மெண்ட் பூமி முருகேசன் பூமிக்கு கிழுபுறமாக உள்ளது என்றால் தென் கிழக்காக உள்ளது. நான் செய்தகொண்ட பரிவர்த்தனை சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 3 வது அயிட்ட சொத்தை வாதிகள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் அவர்கள் பயன்படுத்தவில்லை. மேலும் அது எனது பட்டா பூமி ஆகும். சத்யா கிரைய பத்திரத்தில் முருகேசன் பூமிக்கு கிழபுறம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் வரைபடத்தில் உள்ளவாறு பூமி அனுபவிக்கப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் அளவு பிரகாரம்தான் அனுபவிக்கப்பட்டு வருகிறது. வாதி பூமிக்கு மேற்கு புறமாக உள்ளதாக சொல்லப்படும் தடத்திற்கும் இந்த வழக்கிற்கும்

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.07.22 16:06:34 +0530

சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வாதிகளை ஏமாற்றி அவர்களது பூமியை அபகரிப்பதற்காக முன்தேதியிட்டு முத்திரைத்தாள் பெற்று பின்தேதியில் போலியாக பரிவர்த்தனை ஆவணம் பதிவு செய்து பொய் எதிர்வாதம் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு வாதிகள் கோரியபடி பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.07.22 16:06:40 +0530